Journal of Valartamil, eISSN 2716-5507,
Volume 3 No.2 2022 (8-22)

# பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளும் தற்காலச் சூழல்களும்

# Social Thinking in Barathidasan Poems and Related Current Issues

**Dhilip Kumar Agilan**[1]
Faculty of Language and Communication, Universiti Pendidikan Sultan Idris,
Tanjong Malim, Perak, MALAYSIA
dhilipchandrusp@gmail.com

**Kingston Pal Thamburaj**[2]
Faculty of Language and Communication, Universiti Pendidikan Sultan Idris,
Tanjong Malim, Perak, MALAYSIA

**Thevika Agilan**[3]
Faculty of Business and Economics, Universiti Pendidikan Sultan Idris,
Tanjong Malim, Perak, MALAYSIA
thevikeviey08@gmail.com

**To cite this article (APA):** Agilan, D. K., Pal Thamburaj, K., & Agilan, T. (2022). பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளும் தற்காலச் சூழல்களும்: Social Thinking in Barathidasan Poems and Related Current Issues . *Journal of Valartamil*, *3*(2), 8-22. https://doi.org/10.37134/jvt.vol3.2.2.2022

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol3.2.2.2022

**ஆய்வுச்சாரம்:** தமிழுலகம் போற்றுகின்ற சிந்தனையாளர்களுள் பாவேந்தர் பாரதிதாசனும் ஒருவராவார். அவரின் கவிதைகளில் பல சீர்திருத்தக் கருத்துகளும் சமுதாயச் சிந்தனைகளும் பொதிந்துள்ளன. அவ்வகையில், பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளைக் கண்டறிந்து விளக்கி அவற்றை தற்காலச் சூழல்களோடு பொருத்தி விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு பாரதிதாசன் கவிதைகளில் காணப்படுகின்ற சாதிய மறுப்பு, பெண்ணுரிமை மற்றும் மூட நம்பிக்கை ஒழிப்பு என்ற மூன்று சிந்தனைகளை ஆராய்ந்துள்ளது. இந்த ஆய்வு நூலக ஆய்வு முறையில் பண்புசார் ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

***கருச்சொற்கள்:*** பாவேந்தர், பாரதிதாசன், சமுதாயச் சிந்தனைகள், தற்காலச் சூழல்கள்

**Abstract:** Barathidasan is a well-known social reformalist. His poems delivered numerous social thinking ideas. Due to it, this research investigated the social thinking ideas in Barathidasan poems and related current issues. Three main social thinking ideas such as caste refusal, women rights and abolition superstition beliefs were explained in this research. This research designed as qualitative research by using library research.

***Keywords:*** Paventhar, barathidasan, social thinking, current issues

## முன்னுரை

தமிழ்க்கூறு நல்லுலகம் பல திறம் வாய்ந்த படைப்பாளர்களை வழங்கிய நற்பெயருடையது. அவர்களது படைப்புகள் வாழ்வியலைக் காட்டும் கண்ணாடிகளாக மட்டுமல்லாது குமுகாயம் நலம்பெறவும் விடிவெள்ளி காணவும் எண்ணற்ற கருத்துகளை வழங்கும் பெட்டகங்களாகவும் இருக்கின்றன. எளிய முறையில் கவிதைப்பாடி சமுதாயச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த பாரதியின் வழிக்கோலாய் வந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். இலக்கியங்கள் சமூகப் பதிவையும் சமூக மாற்றத்திற்கான பதிவுகளையும் உள்ளடக்கியிருக்கின்றன என்பதை உணர்ந்த அவர், தன்னுடைய் அகவயமான உணர்வுகளைக் கவிதைகளில் அழகுற செதுக்கினார். அத்தகைய மாண்புடைய பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளில் பொதிந்துள்ள சமுதாயச் சிந்தனைகளை ஆய்தல் நலம் பயக்கும். அதைத் தற்காலச் சூழல்களோடு பொருத்திப் பார்ப்பது மேலும் ஆக்ககரமானதாக அமையும்.

## ஆய்வு நோக்கம்

1. பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளை விளக்குதல்.

2. பாரதிதாசன் கவிதைகளின் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளோடு தொடர்புடைய தற்காலச் சூழல்களை விளக்குதல்.

## ஆய்வு எல்லை / அணுகுமுறை

இந்த ஆய்வு நூலாய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி பண்புசார் ஆய்வாக எழுதப்பட்டுள்ளது. பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளோடு தொடர்புடைய ஏனைய மூலங்களில் காணப்படும் தகவல்கள் இந்த ஆய்வில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. நூல்கள், இணையச் செய்திகள், ஆய்வேடுகள், கட்டுரைகள் போன்றவரை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வின் எல்லையாக 2015-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட பாரதிதாசன் கவிதைகள் எனும் நூல் அமைந்துள்ளது.

**சாதிய மறுப்பு**

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்” (972),

என்ற திருக்குறள் எல்லா உயிர்களுக்கும் பிறப்பென்பது ஒத்தத் தன்மையுடையது என்பதை நன்கு உணர்த்துகின்றது. “பெரியோரெல்லாம் பெரியோருமல்லர்; சிறியோரெல்லாம் சிறியோருமல்லர்”, எனும் வெற்றி வேற்கை மனிதர்களுள் வேற்றுமை உடையார் யாருமில்லை; அது அவரவர் செயல் கருதி வருதலாம் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

ஏறக்குறைய சமத்துவம் என்பது பன்னெடுங்காலமாகப் பேசப்பட்டு வரும் ஒரு கொள்கையாகும். மக்கள் அவரவர் செயல் வன்மையினால் உயர்ந்த தாழ்ந்த இடங்களை அடைகிறார்களேத் தவிர, பிறப்பால் மாந்தருக்குள் பிரிவென்பது மூடச் செயல் என்பது ஆன்றோர்கள் பன்னெடுங்காலமாக உணர்த்தி வந்த ஒன்றாக இருக்கின்றது.

“செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்” (26),

என்ற வழங்கும் குறளும், “பெருமையும் சிறுமையும் தான் தர வருமே” என்ற வெற்றி வேற்கையும் மேற்கூறிய கருத்தோடு ஒத்து வருவதைக் காண்க. இருந்தப்போழ்திலும், அறிவுக்கு ஒவ்வாதார் சிலர் கொண்டு வந்த கேட்டினால் மனிதருக்குள் பிறப்பால் வேற்றுமை காட்டப்பட்டது. அவ்வாறு காட்டப்பட்டது “வருணாச்சிரம” முறைமை என்று வழங்கி, பின்னர் சாதி என்று கிளைத்து ஊறு விளைவித்தது எனலாம். டேஸ்பாண்டே (2010), கூற்றுப்படி, சாதியம் என்பது முதலில் தொழிற்கருதி அமைக்கப்பட்டது. இது, வருணாச்சிரம முறையின் மேல் விரிவாக்கம் என்று காணலாம்.

“சாதிகள் இல்லையடி பாப்பா; - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்”, **(பாப்பா பாடல் – 15)**

என்ற பாரதியின் வரிகளை இன்னும் விரித்துப் பேசும் பாரதிதாசனின் கவிதை வரிகள் சாட்டை அடிக்கு ஒப்பானவையாக இருக்கின்றன. வருணாச்சிரம முறையில் முதலில் நான்கு பகுப்புகள் இருந்த நிலையில், பின்னர் “பஞ்சமர்” என்றொரு பகுப்பு உருவாக்கப்பட்டது. இதுவே, பின்னாளில் பல சாதிகளாக உருவெடுத்தது என்று விளக்கும் பாரதிதாசன், இதற்கு காரணம் “மனு” என்கிறார்.

“வேதம் உணர்ந்தவன் அந்தணன் - இந்த

மேதினியை ஆளுபவன் சத்திரியனாம் - மிக
நீதமுடன் வைசியன் என்று உயர்வு செய்தார் - மிக
நாதியற்று வேலைகள் செய்தே - முன்பு
நாத்திறம் அற்றிருந்தவன் சூத்திரன் என்றே - சொல்லி
ஆதியினில் மனு வகுத்தான் - இவை
அன்றியும் பஞ்சமர்கள் என்பதும் ஒன்றாம்",

**(பாரதிதாசன் கவிதைகள் 3, ஞாயமற்ற மறியல் 6)**

என்ற வரிகள் மேற்கூறிய கருத்தினை அரண் செய்கின்றன. இது, இந்தியாவில் (இந்தியர்களிடையே) மட்டுமே உள்ளது என்று வெட்கும் பாரதிதாசன்,

"தீண்டாமை என்னும் ஒருபேய் - இந்தத்
தேசத்தில் மாத்திரமே திரியக் கண்டோம் - எனில்
ஈண்டு பிறநாட்டில் இருப்போர் - செவிக்கு
ஏறியதும் இச்செயலைக் காறி உமிழ்வார்",

**(பாரதிதாசன் கவிதைகள் 3, ஞாயமற்ற மறியல் - 3)**

என்று வெகுண்டு எழுகிறார்.

"சாதிப்பிரிவு செய்தார்
தம்மை உயர்த்துதற்கே
நீதிகள் சொன்னாரடி-சகியே
நீதிகள் சொன்னாரடி",

**(பாரதிதாசன் கவிதைகள் 3, சமத்துவப்பாட்டு - 45)**

என்ற வரிகளில் இச்சாதியப் பாகுபாடு என்பது தம்மை உயர்த்திக் கொள்வதற்காக ஒரு கூட்டம் செய்த சதி என்று போட்டு உடைக்கிறார்.

மேலும், தமிழர்க்குச் சாதி என்பது இல்லை. பன்னெடுங்காலமாகப் புறையோடி போய்விட்ட இச்சாதியக் கட்டமைப்பால் தமிழர்க்குள்ளும் இச்சாதிய அமைப்புப் புகுந்து விட்டது, என்றக் கூற்றினை அன்னார்,

" மிக்கு உயர்ந்த சாதி, கீழ்ச்சாதி என்னும்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க்கில்லை
பொய்க் கூற்றே சாதி எனல்",

**(பாரதிதாசன் கவிதைகள் - கடல்மேல் குமிழிகள் : 26)**

என்ற வரிகளில் மெய்ப்பிக்கிறார். "அடலருந் துப்பின்" என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலில்,

துடியன், பாணன், பறையன், கடம்பன், என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை;
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி,
ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்,
கல்லே பரவின் அல்லது,
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே' (**புறம் 335**)

என்றப் பாடலும் தமிழர் முன்னர் குடிகள் அமைப்பில் வாழ்ந்திருந்தனரே அன்றி சாதிய முறையில் பகுக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது.

ஆனால், இன்றும் மக்களிடையே சாதிய முறை ஆழ வேரூன்றி இருக்கிறது. சாதியப் பெயரில் ஆணவக் கொலைகளும் வன்முறைகளும் நடந்த வண்ணமாகவே உள்ளன. கடந்த ஆண்டு, தமிழக மேட்டுப்பாளையத்தில் உயர்சாதி பையனைக் காதலித்ததால் தலித் பெண் தாக்கப்பட்டுள்ளார். அந்தப் பையனும் தாக்கப்பட்டுச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும், இந்தியக் குற்றப்பிரிவு ஆணையம் 2016-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், 2015-ஆம் ஆண்டைவிட தமிழகத்தில் இரட்டிப்புச் சாதிய மோதல்கள் நடந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. 2015-ஆம் ஆண்டு நடந்த சாதிய மேதல்களின் எண்ணிக்கை 426-ஆகும். நம்முடைய மலேசியாவிலும் சாதியச் சங்கங்கள் முளைத்து வருகின்றன. சாதி இல்லை என்று கூப்பாடு போடும் மலேசியர்களாகிய நாம், திருமணம் போன்ற சடங்குகளில் சாதியை இன்னும் விட்டொழிக்கவில்லை என்பது கண்கூடான உண்மை.

## பெண்ணுரிமை

பெண்களைக் குறித்து இலக்கியங்கள் பல்வேறு கருத்துகளை முன் வைத்தே வருகின்றன. பெண்களைச் சமூகத்தின் கட்டமைப்பில் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றிய மாண்பு நெடுநாள் வரை இருந்திருக்கிறது. சங்கக்காலம் வரை தாய்வழிச் சமூகமாக இருந்தது, பின்னர் தந்தைவழி சமூகமாக மாறியப் போது பெண்கள் மீதான அடக்குமுறைகள் வலிந்து திணிக்கப்பட்டன.

"புலிக் குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வான் முகை அன்ன கூம்பு முகிழ்
உறை அமை தீம் தயிர் கலக்கி நுரை தெரிந்து

புகர் வாய்க் குழிசி பூஞ் சுமட்டு இரீஇ
நாள் மோர் மாறும் நன் மா மேனி" **( பெரும் 157 – 160**)

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல், அக்காலச் சமூகம் பெண்வழி இருந்ததற்கு நல்ல சான்றாக அமைகின்றது. குடும்பவியல் என்பதைத் தாண்டி பெண்கள் வணிகவியல் போன்றவற்றிலும் கால் பதித்திருந்தனர் என்பது இப்பாடல் முக்கியச் சான்றாகும். ஔவையும் பெண்ணிம் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசும் பொழுது,

"இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்", **( மூதுரை – 22)**

என்றும்,

"நீறில்லா நெற்றிபாழ்; நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் - மாறில்
உடன்பிறப் பில்லா உடம்புபாழ்; பாழே
மடக்கொடி இல்லா மனை", **( நல்வழி – 24 )**

என்று கூறுவதை ஒப்பு நோக்குக. பாரதி, "மாதராய் பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டும்", என்றான்.

"இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்து இங்கே
திலக வாணுதலார் தங்கள் பாரத தேசம் ஓங்க உழைத்திடல் வேண்டுமாம்",

**(புதுமைப் பெண், செய்யுள் : 4,7,8)"**

என்று பாரதி பெண்கள் புதுமைப் பெண்களாக வளர்ந்து சிறக்க வேண்டும் ஏற்றம் கொண்டு பாடினான். அதே வழியில் வந்தப் பாரதிதாசனும், ஒடுக்குமுறைக்கு ஆட்படுத்தப்பட்ட பெண்ணியம் வாழ கவிதைகளைப் பாடுகிறார்.

முயலுக்கு எப்படிக் கொம்பு முளையாதோ அதுபோல, பெண்ணடிமை இருக்கும் நாடு முன்னேறாது என்பதை நாட்டின் விடுதலைக்கு முன்னரே கவிஞர்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே",

**(பாரதிதாசன் கவிதைகள், 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்')**

என்ற வரிகளால் அதைக் காட்டுகிறார்.

பாரதிதாசன் படைத்தப் பெண்கள் உரிமைகளைத் தாங்களே எடுத்துக் கொள்ளும் பாங்கினராக இருக்கின்றனர்.

“செல்வப் பிள்ளாய்! இன்று புவியில் பெண்கள்
சிறுநிலையில் இருக்க வில்லை! விழித்துக் கொண்டார்!”,

**(பாரதிதாசன் கவிதைகள் : முதல் தொகுதி)**

என்ற வரிகளில் அவர் அதைக் காட்டுகின்றார். அதோடு, அப்பாங்கினராகிய பெண் பிறந்தபொழுது,

“மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!

**(பாரதிதாசன் கவிதைகள்: முதல் தொகுதி)**

என்று தாலாட்டுகிறார் கவிஞர். பாரதிதாசன் படைத்தப் பெண்கள் விரிந்த நோக்குடையவர்களாகவும் செயல்திறம் வாய்ந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

“நிற்கையில் நீ நிமிர்ந்து நிற்பாய் குன்றத்தைப் போல்!”

**(பாரதிதாசன் கவிதைகள், ‘வீரத்தாய்’ காட்சி : 3)**

என்ற வரிகள் அதை மெய்ப்பிக்கின்றன. பெண்கள் குடும்பம் என்ற கூட்டுக்குள்ளும், சமுதாயக் கட்டுப்பாட்டுக்குள்ளும் இல்லாமல் நாடு, உலகம் என்ற பரந்த நோக்கில் செயல்பட வேண்டும் என்பது அவருடைய கருத்தாக இருக்கிறது.

“வினையே ஆடவர்க்கு உயிரே,
வாள்நுதல் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்”, **(குறுந் – 135)**

என்ற குறுந்தொகைப் பாடலையும்,

“அச்சமும் மடமும் நாணும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய'

**(தொல், பொருள், களவியல்.நூற்.9)**

என்ற தொல்காப்பிய நூற்பாவையும் தவிடுப்பொடியாக்கும் வகையில் பெண்கள் செயல்பட வேண்டும் என்பது அவருடைய கருத்தாக இருக்கிறது. பெண் என்பவள் அடுக்களைக்குள் மட்டும் அடங்காமல் உயர்ந்த சிந்தனையோடும், நேர்கொண்ட பார்வையோடும், நெஞ்சில் திறத்தோடும், நாடு, உலகம் சிறக்கச்ச் செயலாற்ற வேண்டும் என்பதை அன்னார்,

"விழுந்த தமிழ்நாடு தலைகாக்க என்றன்
உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்",
**(குடும்பவிளக்கு** - 1)

என்ற வரிகளாலும்,

"அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப தல்லால்
இதுவரைக்கும் பொதுநலத்துக்கு என்ன செய்தோம்?
என்பதைநாம் நினைத்துப் பார்ப்பதுவு மில்லை"
**(குடும்பவிளக்கு** - 1)

என்ற வரிகளாலும் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பால் கணக்கு, தயிர்க்கணக்கு வைத்துக் கொள்ளும் அளவு கணக்கறிவு, எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்த அளவு படிப்பு ஆகியவை பெண்ணுக்குப் போதும் என்று கருதியிருந்தது பழைய உலகம். கல்வி இல்லா நிலம் களர் நிலம்; அங்குப் புல் விளையலாம்; நல்ல புதல்வர் விளைய மாட்டார் என்றார் பாரதிதாசன். கல்வி வல்லாராய்ப் பெண்கள் திகழ வேண்டும்; தாய் மொழிக் கல்வியைப் பெண்கள் பெறுதல் வேண்டும் என்று நினைத்தார் கவிஞர். அதுக்குறித்துக் காட்டும் பொழுது,

"இந்தப் பழம்புகழ் மீள வேண்டும் நாட்டில்
எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்
வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக வேண்டும்
மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும்",
**(குடும்பவிளக்கு**- 1)

என்று கல்விக் கற்ற குடும்பப் பெண் பேசுவதாகக் கவிஞர் காட்டுவது புரட்சியின் உச்சம்.

ஆனால், இன்றைய நிலையிலும் பெண் மீதான அடக்கு முறைகள் வலுத்தே வருகின்றன. ***"Child Marriages In Malaysia" (2018),*** என்ற ஆய்வேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி, சிறுவர்களைக் காட்டிலும் அதிகப்படியான சிறுமிகள் பாலியல் திருமணத்திற்குத் தள்ளப்படுகின்றனர். சிலர் எட்டு வயதிற்குள் திருமணம் செய்துவிக்கப்படும் அவலமும் நேருகின்றது. யுனிசேப்பின் அறிக்கையின்படி, 720 மில்லியம் பெண்கள் சிறுவயதில் திருமணம் செய்துவிக்கப்படுவதும், ஆறிலிருந்து பதினைந்து மில்லியன் பெண்கள் பதினெட்டு வயதிற்குள்ளாகவே திருமணம் செய்துவிக்கப்படுவதும் நடக்கிறது. இதைக் கணக்கிட்டுப் பார்க்கையில் 2050-க்குள் ஏறக்குறைய 1.2 பில்லியன் பால்ய திருமணமான பெண்கள் இருப்பார்கள். பாலியல் பாகுபாடு என்ற அடிப்படையில், இன்னும் சில

இடங்களில் பெண்கள் அவர்களது தந்தை அல்லது கணவனின் உடைமைகளாகப் பார்க்கப்படுவதோடு தங்களுக்கு விருப்பமான துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

“United Nations Girls Education Initiative”, எனும் அமைப்பின் அகப்பக்கம் குறிப்பிட்டுள்ளப்படி, உலகிலேயே 14% எனும் விகிதத்தில் பெண் கல்வி குறைவாக உள்ள நாடு ஆப்கானிஸ்தான் ஆகும். அந்த ஒரு நாடு மட்டுமின்றி ஏதோ வகையில் பெண் கல்வி உலகம் முழுதும் மறுக்கப்பட்டே வந்து கொண்டிருக்கிறது. குடும்ப ஆண் உறுப்பினர்களின் அடக்குமுறை, திருமணம், குடும்பப் பொருளாதார வசதி போன்ற கரணியங்களால் பெண் கல்வி மறுக்கப்படுகிறது.

ஆக,

“ஆடை, அணிகலன்கள், ஆசைக்கு வாசமலர்
தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும்
அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப் போல் வாழுவதும்
கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி”,

**(பாரதிதாசன் கவிதைகள், ‘வீரத்தாய்’ காட்சி : 1)**

என்ற பாரதிதாசனின் கவிதை வரிகளைக் கருத்தில் கொண்டு, பெண்கள் அத்தகையத் தன்மைகளை விட்டொழித்துத் தூர சிந்தனைகளோடு வாழ முற்பட்டால் ஊரும் உலகமும் செழிக்கும்.

**மூட நம்பிக்கை ஒழிப்பு**

வாழ்க்கையில் காணும் அனைத்து நம்பிக்கைகளுக்கும் மக்கள் காரண காரியம் அறிந்திருப்பர் என்று கூற இயலாது. “நம்பிக்கைகளுக்கும் காரணம் காணுவது இலகுவன்று”, என்பது க.கைலாசபதி அவர்களின் கூற்றாகும். மனிதன் தான் நம்புன் ஒன்றிற்கான காரண காரியங்களை அறிந்திருப்பின் நம்பிக்கை என்றும், அவ்வாறு இல்லை எனின் மூட நம்பிக்கை என்றும் வழங்கப்பெறும். காந்தி.க (2003), இனத்திற்கு இனம் மாறுபட்டுக் காணப்படும் நம்பிக்கைகளை மூட நம்பிக்கைகள் என்று ஒதுக்கிவிட முடியாது. அவை மனித வாழ்வில் நடக்கின்ற அத்தனை செயல்களுக்கும் அடிப்படையாகத் திகழ்கின்றன. அவை பண்பாடு உறுப்புகளின் ஒட்டு மொத்தமான உணர்ச்சிகளின் தொகுதி என்று கூறுவது பொருத்தமானதாகும் என்கிறார். ஆனால், நாட்டார் மக்களிடம் காணப்படும் நம்பிக்கைகள் மூட நம்பிக்கைகள் என்று காட்டப்படுகின்றன. நம்பிக்கை என்பது அனைத்து மக்களும் நம்பும் கருத்துகளும் எண்ணங்களுமாயிருக்க, மூட நம்பிக்கை என்பது மக்களின் கேள்வியற்ற நம்பிக்கையாக இருக்கலாம் என்கிறார் இராமநாதன் (1997).

எது எப்படியாயினும் தமிழர் மத்தியில் அறிவுக்கு ஒவ்வாத மூட நம்பிக்கைகளைப் பாவேந்தர் பாரதிதாசன் பெரிதும் சாடியுள்ளார்.

“மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!

**(பாரதிதாசன் கவிதைகள்: முதல் தொகுதி**)

என்ற வரிகளின்வழி அன்னார், தமிழர்களிடையே மூட நம்பிக்கைகள் தேங்கி ஏற்பட்டுள்ள தோய்வினை முடைநாற்றம் என்கிறார். இறைவழிபாடு, ஏனைய வாழ்வியல் சார்ந்த மூட நம்பிக்கைகள் பெரும்பாலும் அதிகம் பெண்களிடையே ஊறியிருப்பதால் பெண்கள் அதனிலிருந்து வெளிவர வேண்டும் என்பது அவருடைய கருத்தாக இருக்கிறது. அதோடு,

“மானிடர் ஆயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது”,

**(ஔவையார் தனிப் பாடல் :** 57)

என்ற வரிகளில் குறிப்பிட்டுள்ள பேடுத் தன்மையைத் தம்முடைய கவிதைகளில் மாற்றுப் பொருளில் பயன்படுத்துகிறார் பாவேந்தர். ஆணும் அல்லாத பெண்ணும் அல்லாதத் தன்மையைக் குறிக்கும் பேடித் தன்மையை அறிவுக்குப் பொருந்தாத வழக்கங்களின் மீது ஏற்றிப் பாடுகிறார். எப்படி அத்தன்மையினரால் இனம் விருத்தியடையாதோ அதுபோல இந்தப் பேடி வழக்கங்களால் இனம் உய்யாது என்பதை,

“பேடி வழக்கங்கள் மூடத்தனம் - இந்தப்
பீடைகளே இங்குச் சாத்திரங்கள்
**(பாரதிதாசன் கவிதைகள் 11, மாந்தோப்பில் மணம்** - 9)

என்ற வரிகளில் காட்டுகிறார். அப்படிப்பட்ட மூடத்தனங்களை நாம் சாத்திரம் என்று போற்றுவதால் தான் இன்றளவும் கைப்பெண் மறுமணம் என்பது சமூகத்தில் கேலிக்கூத்தாகப் பார்க்கப்படும் ஒன்றாக இருக்கிறது.

“பல்சான் றீரே! பல்சான் றீரே!
செல்கெனச் சொல்லாது, ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடைஇடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்எள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ;
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்குஅரிது ஆகுக தில்ல; எமக்குஎம்

பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்புஅற
வள்இதழ் அவிழ்ந்த தாமரை
நள்இரும் பொய்கையும் தீயும்ஓர் அற்றே!", **( புறம் -240**),

என்ற புறநானூற்றுப் பாடல் சங்கக்காலத்தில் கணவனை இழந்தப் பெண்கள் உடன்கட்டை ஏறாத நிலையில் அனுபவித்தத் துன்பங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது. மக்களின் மனம் இன்று எவ்வளவோ மாறியப் போழ்திலும், அவ்வாறு கைம்பெண் மறுமணம் தாழ்வு என்று எண்ணிய ஒரு தாயின் உள்ளத்தை,

"புற்றரவு ஒத்தது தாயர் உள்ளம் - அங்கு,
புன்னகை கொண்டது மூடத்தனம்"
**(பாரதிதாசன் கவிதைகள், 13 காதல் குற்றவாளிகள்** - 6)

என்ற வரிகளில் கவிஞர் காட்டுகிறார். காதல் கொண்டோர் மூட நம்பிக்கைகளுக்கு அஞ்சக் கூடாது. அதை எதிர்க்க வேண்டும் என்பதை,

"காதல் என்னும் மாமலையில் ஏறிநின்றீர்
கடுமூட வழக்கத்துக்கு அஞ்சலாமோ?"
**(காதல் நினைவுகள். பக்.** 21)

ஒரு கேள்வியாக வைக்கின்றார் கவிஞர்.

"மடமைதான் அச்சத்தின் வேராம் - அந்த
மடமையால் விளைவதே போராம்",
**(இசையமுது பக்.** 54)

என்று அறிவுக்குப் பொருந்தாத அச்சத்திற்கு காரணமாக இருப்பது மடைமை என்கிறார். அறியாமை உடையவர்களே அச்சப்படுகிறார்கள் என்கிறார் கவிஞர்.

இன்றையச் சமூக நிலையில் பார்க்கும்பொழுது மக்களிடையே இன்றும் மூட நம்பிக்கைகள் நிலவி வருவதைக் காண முடிகிறது. ஜப்பானியர்கள் பாம்புத் தோலைப் பணம் வரவழைக்கும் பொருளாகக் கருதுகின்றனர். அவர்களைப் பொறுத்தமட்டில் மிகுந்த புனிதமானதாகக் கருதப்படும் பாம்பு தோல்கள், குறிப்பாக வெள்ளைப் பாம்பின் தோல்கள் வீட்டிலோ அல்லது பணப்பையிலோ இருந்தால் செல்வம் குவியும் என்பது நம்பிக்கையாக இருக்கிறது. தொடர்ந்து, கொரியர்களுக்கு நான்காம் எண் அதிர்ஷ்டம் இல்லாத ஒன்றாகும். கொரிய மொழியில் நான்காம் எண்ணை ஒலிக்கும் ஒலியானது மரணம் என்ற ஒலியோடு இயைந்து வருவதால் எது ஒலிப்பதிலிருந்து தவிர்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது.ஆக, எதுவாயினும் மக்கள் அறிவார்ந்த நிலையில், ஒரு நம்பிக்கையின் காரணம் காரியங்களை அறிந்து செயல்பட்டால் நலமாக இருக்கும்.

"பாழ்படும் பழமை சூழ்வது திறமா?
பகுத்தறிவால் நலம் வகுப்பது திறமா?",
**(பாரதிதாசன் கவிதைகள் 50, ஆய்ந்துபார் - 9)**

என்ற வரிகளைச் சிந்தையில் கொண்டு, தான் தோன்றித்தனமாக செவியில் விழும் அத்தனையும் நம்பாமல் அறிவோடு செயல்பட்டால் இன்பம் விளையும்.

**முடிவுரை**

முடிபாக, பாவேந்தர் பாரதிதாசன் சமூகத்திற்கு வழங்கியுள்ள கருத்துகளை ஒவ்வொருஓவரும் கற்றல் அருமையான செயலாகும். ஞாலத்தின் மேன்மையெல்லாம் உற்று, சீரிய வாழ்வு வாழ விழைவோர், அன்னாரின் கவிதைகளை உய்த்துணர வேண்டும். அங்஑னம் செய்யின் வாழ்வு கோடாமைக் கொண்டு இலங்கும் என்பது உறுதி.

**மேற்கோள்**


வரதராசன்.மு.வ.(2008).திருக்குறள் தெளிவுரை.சென்னை: அப்பர் அச்சகம்.

நடராசன்.பி.ரா.(2017).திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் – முதலாம் பகுதி .சென்னை:ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட்.

நடராசன்.பி.ரா.(2017).திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் – இரண்டாம் பகுதி . சென்னை:ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட்.

நடராசன்.பி.ரா.(2017).திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம் – மூன்றாம் பகுதி .சென்னை:ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட்.

நடராசன்.பி.ரா.(2016).திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் – முதலாம் பகுதி .சென்னை:பரமேஸ்வரி கிராப்பிக்ஸ்.

நடராசன்.பி.ரா.(2016).திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் – இரண்டாம் பகுதி .சென்னை:பரமேஸ்வரி கிராப்பிக்ஸ்.

நடராசன்.பி.ரா.(2016).திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்-மூன்றாம் பகுதி .சென்னை:பரமேஸ்வரி கிராப்பிக்ஸ்.

அண்ணாமலை.சு.ப.(2002).திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – முதல் பகுதி

.சென்னை:கலாஷேத்ரா பதிப்பகம்.

அண்ணாமலை.சு.ப.(2002).திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – இரண்டாம் பகுதி .சென்னை:கலாஷேத்ரா பதிப்பகம்.

அண்ணாமலை.சு.ப.(2002).திருமந்திரம் மூலபாட ஆய்வு பதிப்பு – மூன்றாம் பகுதி .சென்னை:கலாஷேத்ரா பதிப்பகம்.

துரை.தண்டபாணி.(2017).மாணிக்கவாசக சுவாமிகள் அருளி செய்த திருவாசகம் ( மூலமும் – உரையும்). சென்னை:பரமேஸ்வரி கிராப்பிக்ஸ்.

சுப்புரெட்டியார்.ந.(2001).*தாயுமானவர்.*சென்னை:கலைஞன் பதிப்பகம்.

புலியூர் கேசிகன்.(2010).*ஔவையார் தனிப்பாடல்கள்.*சென்னை:கிளாசிக் பிரிண்டர்ஸ்.

சம்பந்த முதலியரால்.(1891).*தாயுமான சுவாமிகள் பாடல்.* சென்னை: அமெரிக்கன்
அச்சுக்கூடம்.

வடிவேலு முதலியார்.மா.(1953). *சிவவாக்கியர் பாடல் மூலமும் உரையும்.*சென்னை: இரத்தின
நாயகர் அண்டு ஸன்ஸ்.

பாரதியார்.(2008).*பாரதியார் கவிதைகள் – முழுவதும்.*நாமக்கல்:திருமகள் பதிப்பகம்.

பாரதிதாசன்.(2015).*பாரதிதாசன் கவிதைகள்.*நாமக்கல்:திருமகள் பதிப்பகம்.

புலியூர் கேசிகன்.(2010).*புறநானூறு மூலமும் உரையும்.*சென்னை:சாரதா பதிப்பகம்.

கோவிந்தனார்.க.(1996). *பெரும்பாணாற்றுப்படை – விளக்கவுரை.*சென்னை:வெற்றி அச்சகம்.

ஔவையார்.(1997). *வாக்குண்டாம் (மூதுரை).* வவுனியா:சுதன் அச்சகம்.

அகளங்கன்.(1998).*ஔவையார் அருளிய நல்வழி.* வவுனியா. சுதன் அச்சகம்.

புலியூர் கேசிகன்.(2010).*குறுந்தொகை மூலமும் உரையும்.*சென்னை:சாரதா பதிப்பகம்.

தொல்காப்பியர்.(1948).*தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பாகம்).* சுன்னகம்:திருமகள்

காந்தி.க.(2003).*தமிழர் பழக்க வழக்கங்களுக் நம்பிக்கைகளும்.* சென்னை:சென்னை மைக்ரோ
பிரிண்ட்.

இராமநாதன்.ஆறு.(1997). *நாட்டுப்புற இயல் ஆய்வுகள்.*சென்னை:மணிவாசகர் பதிப்பகம்.
பதிப்பகம்.

சுதா.வை.(2017). தாயுமானவர் பாடல்களில்
தன்னையறிதல்.https://www.geotamil.com/index.php?option=com_content&view=article&id=404
4:2017-07-26-23-32-22&catid=65:2014-11-23-05-26-56–லிருந்து 24 ஜூலை 2020 பெறப்பட்டது.

யோகி.(2014). *எங்கள் நாட்டில் சாதி இல்லை!.* http://vallinam.com.my/version2/?p=1489–
லிருந்து 25 ஜூலை 2020 எடுக்கப்பட்டது.

Animal Asia. (2002). *End The Dog Meat Trade.* Retrieved From https://www.animalsasia.org/us/our-work/cat-and-dog-welfare/facts-about-dog-meat-trade.html?gclid=CjwKCAjwsO_4BRBBEiwAyagRTbkdUnR1bK8CdIsVWFjfJ4xuCLA_8kXKOdGKYjK2prvG5hBIY35mFRoCY30QAvD_BwEon 23 July 2020.

Audrey Dermawan. (2020). *Newborn flung to its death from 13th floor of Penang apartment [NSTTV].* Retrieved From https://www.nst.com.my/news/crime-courts/2020/07/607401/newborn-flung-its-death-13th-floor-penang apartment#:~:text=GEORGE%20TOWN%3A%20A%20newborn%20baby,act%20soon%20after%20its%20birth.&text=On%20May%2013%2C%20a%20newborn,5%20here%2C%20hours%20after%20birth.on 23 July 2020.

BBC News. (2020). *Yemen crisis: Why is there a war?.* Retrieved From
https://www.bbc.com/news/world-middle-east-29319423On 24 July 2020.

BBC NEWS. (2019). *மேட்டுப்பாளையம் சாதிய ஆணவப் படுகொலை: தாக்கப்பட்ட தலித் பெண்ணும் உயிரிழப்பு.* https://www.bbc.com/tamil/india-48809416– லிருந்து 25 ஜூலை எடுக்கப்பட்டது.

BBC NEWS. (2016). *தமிழகத்தில் சாதி மோதல்கள் அதிகரிப்பு: தேசிய குற்றப் பதிவுகள் ஆணையம் தகவல்.*

https://www.bbc.com/tamil/india/2016/09/160906_casterelatedclash_tn– லிருந்து 25 ஜூலை 2020 எடுக்க்ப்பட்டது.

Firdaus Azil. (2020). Jumlah ingkar PKP semakin ramai, siapa ditahan terus ke mahkamah!. Retrieved From http://www.astroawani.com/berita-malaysia/jumlah-ingkar-pkp-semakin-ramai-siapa-ditahan-terus-ke-mahkamah-238279 On 24 July 2020

Life in Kansai. (2014). Money superstitions in Japan. Retrieved From http://lifeinkansai.com/money-superstitions-in-japan/On 26 July 2020.

Noor Aziah Mohd Awal Mohd Al Adib Samuri. (2018).*Child Marriages in Malaysia.* Retrieved Fromhttps://www.unicef.org/malaysia/media/711/file/Child%20marriage%20in%20Malaysia.pdfon 25 Julay 2020.

n.d. (n.d). 4.படைப்பாளி சார்ந்த ஆய்வுகள். file:///C:/Users/HP/Downloads/10%20chapter4.pdf –லிருந்து 24 ஜூலை 2020 பெறப்பட்டது.

n.d. (n.d). Superstition in Korea.Retrieved From https://en.wikipedia.org/wiki/Superstition_in_Koreaon 26 July 2020.

United Nations Girls Education Initiative. (n.d). More children in school in Afghanistan. Retrieved From http://www.ungei.org/news/afghanistan_2343.html#:~:text=Women's%20literacy%20in%20Afghanistan%20is,36%20per%20cent%20receive%20education.On 26 July 2020.

Kingston Pal Thamburaj, and Karthiges Ponniah பாரதிதாசன் கவிதைகளில் பொருளியல் வாதம். Journal of Tamil Peraivu(2016): 76-82.